நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2025

## இடைநிலை மேற்பிரிவு (ஆண்டு 9 & 10)

## Intermediate Upper Level (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்

Time Given : 120 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்துப் பதிலளிக்க வேண்டும்.
ஆசிரியர் வாசிப்பதில் உதவி செய்யலாகாது.

Aug 2025

**1 – 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (1 x 40 = 40 Marks)**

1. தமிழரின் பாரம்பரிய பண்டிகைகளில் ஒன்று:
(அ) நத்தார் (ஆ) தைப்பொங்கல் (இ) மகாபாரதம் (ஈ) பொன் மாலைப் பொழுது

2. பொன் விழா என்பது எத்தனை ஆண்டுகள் நிறைவில் கொண்டாடப்படுகிறது?
(அ) ஐம்பது (ஆ) முப்பது (இ) நூறு (ஈ) இருபத்தி ஐந்து

3. காடும் காடு சார்ந்த இடமும் என்பதைக் குறிக்கும் சொல்
(அ) நெய்தல் (ஆ) குறிஞ்சி (இ) முல்லை (ஈ) மருதம்

4. தீவு என்பது எது?
(அ) நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி
(ஆ) மூன்று பக்கங்கள் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி
(இ) இரண்டு பக்கங்கள் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி
(ஈ) ஒரு பக்கம் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி

5. கவிஞர் என்பவர் யார்?
(அ) விவசாயம் செய்பவர் (ஆ) கட்டடம் கட்டுபவர்
(இ) கவிதை இயற்றுபவர் (ஈ) பாடல் பாடுபவர்

6. முகில் என்பது:
(அ) வானம் (ஆ) மேகம் (இ) சூரியன் (ஈ) சந்திரன்

7. ஞாயிறு என்பது:
(அ)திங்கள் (ஆ) செவ்வாய் (இ) சூரியன் (ஈ) கிழமை

8. பூமி என்பது:
(அ) சுற்றாடல் (ஆ) சூழல் (இ) பூக்கள் (ஈ) உலகம்

9. பெருமை என்பதன் எதிர்ச்சொல்:
(அ) அருமை (ஆ) சிறுமை (இ) கண்மை (ஈ) தீமை

10. இளமை என்பதன் எதிர்ச்சொல்:
(அ) இனிமை (ஆ) இளம் (இ) முதுமை (ஈ) இன்பம்

11. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தவர்கள்:
(அ) பாண்டியர்கள் (ஆ) சோழர்கள் (இ) பல்லவர்கள் (ஈ) சேரர்கள்

12. கப்பல் ஓட்டுபவன் மாலுமி, இதேபோல், வாகனம் ஓட்டுபவன்:
(அ) விமானி (ஆ) சாரதி (இ) சக்கரவர்த்தி (ஈ) சிற்பி

13. எஃகு என்ற சொல்லில் வரும் ஃ என்பது:
(அ) உயிர்மெய் எழுத்து (ஆ) உயிர் எழுத்து (இ) ஆய்த எழுத்து (ஈ) மெய் எழுத்து

14. காவடி என்ற சொல்லில் வரும் கா என்ற எழுத்து எந்த வகை?
(அ) உயிர் எழுத்து (ஆ) நெடில் எழுத்து (இ) குறில் எழுத்து (ஈ) மெய் எழுத்து

15. சென்றுவிட்டான் என்ற சொல் குறிப்பது:
(அ) எதிர் காலம் (ஆ) இறந்த காலம் (இ) நிகழ் காலம் (ஈ) மேற்தரப்பட்ட யாவும்

வேறுபட்ட சொல் எது?

16. (அ) அப்பம் (ஆ) அரிசி (இ) கோதுமை (ஈ) வரகு

17. (அ) சிங்கம் (ஆ) புலி (இ) காடு (ஈ) கரடி

18. (அ) பறை (ஆ) இசை (இ) வீணை (ஈ) புல்லாங்குழல்

19. (அ) அறிவு (ஆ) திறமை (இ) புலவன் (ஈ) புலமை

20. (அ) குளிர் (ஆ) சூடு (இ) வெப்பம் (ஈ) பூமி

21. பராமரிப்பு இல்லாத வாகனம்__________ என்ற சத்தத்துடன் ஓடியது.
(அ) கமகம (ஆ) கடகட (இ) வழவழ (ஈ) சலசல

22. மலர் __________என்று வாசனை வீசியது.
(அ) சலசல (ஆ) கடகட (இ) கமகம (ஈ) வழவழ

23. 'தனது தீர்மானத்தில் உறுதியாக இருப்பது' என்பதை விளக்குவது:
(அ) உடும்புப் பிடி போல் (ஆ) பசுமரத்தாணி போல்
(இ) கிணற்றுத் தவளை போல் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

24. 'தெளிவாகத் தெரிகிறது' என்பதை விளக்குவது:
(அ) கிணற்றுத் தவளை போல் (ஆ) உள்ளங்கை நெல்லிக் கனி போல்
(இ) பசுமரத்தாணி போல் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

25. மனதில் உறுதியுடன் வேலை செய்யும்போது துன்பங்கள் யாவும்__________ மறைந்து விடும்.
(அ) கிணற்றுத் தவளை போல் (ஆ) உள்ளங்கை நெல்லிக் கனி போல்
(இ) சூரியனைக் கண்ட பனி போல் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

26. கல் + தூண்
(அ) கண்தூண் (ஆ) கல்தூண் (இ) கற்றுண்டு (ஈ) கற்றூண்

27. பழமை + சோறு
(அ) பழஞ்சோறு (ஆ) பழையது (இ) பழம்சோறு (ஈ) பழையசோறு

28. பட்டியல் + இடு
(அ) பாட்டியலிடு (ஆ) பட்டியலிடு (இ) பாட்டிலிடு (ஈ) பாடிவிடு

29. இந்நாள்
(அ) இந்த + நாள் (ஆ) இனிமை + நாள் (இ) இயன்ற + நாள் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

30. அப்பாடல்
(அ)அப்பா + பாட்டு (ஆ)அந்த + பாடல் (இ)அகன்ற + பாடல் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

31. நமது __________ நம் கையில் உள்ளது.
(அ) வாள்க்கை (ஆ) வாழ்க்கை (இ) வால்க்கை (ஈ) வாளுக்கை

32. கோடையில் __________ வற்றி விட்டது.
(அ) ஆறுநீர் (ஆ) அறுநீர் (இ) ஆற்றுநீர் (ஈ) அறுனீர்

33. முதுமையில் __________ ஏற்படுவது, இயற்கையே!
(அ) தளர்ச்சி (ஆ) தழற்சி (இ) தலற்சி (ஈ) சுழற்சி

34. வெற்றுப் __________ அடையாளம் காணத் தெரிய வேண்டும்.
(அ) புகழ்ச்சியை (ஆ) புக்கற்சியை (இ) புலற்சியை (ஈ) புலாற்சியை

35. __________ தன் மெய் வருத்தக் கூலி தரும்.
(அ) முயற்சி (ஆ) முயர்ச்சி (இ) முகற்சி (ஈ) முழைத்து

36. திறமை உள்ளவன் எதையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வான். என்ற பொருள் கொண்ட பழமொழி:
(அ) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
(ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
(இ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(ஈ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

37. நிதானமாகச் செய்யும் செயல் நேர்த்தியாக இருக்கும் என்ற பொருள் கொண்ட பழமொழி:
(அ) பதறாத காரியம் சிதறாது.
(ஆ) இளங்கன்று பயம் அறியாது.
(இ) விளையும் பயிரை முளையில் தெரியும்.
(ஈ) ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விம்.

38. ஆறுவது சினம் என்பதன் விளக்கம்:
(அ) கோபத்தைத் தணிக்கத் தெரிய வேண்டும்.
(ஆ) கோபம் கொள்ள வேண்டும்.
(இ) கோபம் எப்பவுமே இருத்தல் வேண்டும்.
(ஈ) கோபம் என்பது பொதுவானது.

39. மாணவர்கள் எல்லோருடனும் இணைந்து ஆசிரியரும் ______________ .
(அ) மகிழ்ந்தார் (ஆ) மகிழ்கிறார் (இ) மகிழ்வார் (ஈ) மேல் உள்ள யாவும் சரி

40. கால் பந்துக் குழு வெற்றியோடு நாடு ______________ .
(அ) திரும்பியது (ஆ) திரும்பினார்கள் (இ) திரும்புவார்கள் (ஈ) திரும்புகிறார்கள்

**கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாது வாக்கியங்கள் எழுதுக.**
**(2 x 5 = 10 Marks)**

41. வாதப் பிரதிவாதம்
42. பதாகை
43. விழிப்புணர்வு
44. மீள்சுழற்சி
45. பூச்சிக்கொல்லி

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளிற்குப் பதில் எழுதுக.**

**சூழலைக் காப்போம், ஆரோக்கியத்தை வளர்ப்போம்.**

நாம் எமது வீட்டில் வீட்டுத் தோட்டத்தை உருவாக்கினால், நச்சுப்பொருட்கள் இல்லாத இயற்கையாக விளைந்த காய்கறிகளை உண்ணலாம். இது எமது உடல் ஆரோக்கியத்திற்கு ஒரு சிறந்த வழியாகும். மேலும் இதன்மூலம் பொறுப்புணர்ச்சி, பொறுமை, சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் உடல் அசைவுத் திறன்களையும் வளர்த்துக்கொள்ளலாம்.

இவ்வாக்கம் சுற்றுப்புறச் சூழலிற்கு மாசு ஏற்படாத வகையில் காய்கறிகளை எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றி அமைகின்றது.

எமது வீட்டிலே வரும் உணவுக் கழிவுகளை ஒரு தாங்கியில் கொட்டி, மக்கிய உரமாக்கி, அதனை எமது வீட்டுத் தோட்டத்திற்குப் பாவிக்கலாம். இதன்மூலம் உணவுக்கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்படுவதுடன், இயற்கையான பசளையும் கிடைக்கும். மேலும் பூச்சி, புழுக்களைக் கட்டுப்படுத்த இயற்கையான பூச்சிக்கொல்லிகளான வேப்பெண்ணை, பஞ்ச கவ்வியம் போன்றவற்றை வீட்டிலேயே தயாரித்து உபயோகிக்கலாம்.

மேலும் தாவரங்களைத் தெரிவுசெய்யும் பொழுது, சூழலுக்கு ஒத்துவரும் தாவரங்களைத் தெரிவு செய்வதால் மண்ணை ஆரோக்கியமாக வைத்திருப்பதோடு, நீரையும் சேமிக்கலாம். அதுமட்டுல்லாமல் பூச்சிகளின் தொல்லைகளில் இருந்தும் இது தாவரங்களைக் காப்பாற்றும். மேலும் குறைந்த நீரோடு, கோடை காலத்தையும் சமாளிக்கக்கூடிய தாவரங்களும் இதற்குள் அடங்கும். சரியான தாவரத் தெரிவு சூழலைப் பாதுகாக்கும்.

இதுமட்டுமல்ல, நீரைச் சேமிக்க, சொட்டு நீர்ப்பாசனம் அல்லது நீர் விசிறி முறையைப் பயன்படுத்தினால் அதுகூட இயற்கையைக் காக்கும். மேலும் செங்குத்து முறையில் வீட்டுத்தோட்டத்தை அமைத்தால் நீர் சேமிப்பு, குடிமனையைக் காலநிலைகளில் இருந்து பாதுகாத்தல், பல்லுயிர்களின் ஆரோக்கியம் என்பனவும் பெருகும்.

இவையாவும் சூழலை மாசடையாமல் காய்கறிகளை வளர்க்கும் முறைகளாகும். ஆகவே வீட்டுத்தோட்டத்தில் காய்கறிகளை வளர்த்து உங்கள் ஆரோக்கியம் திறன்களை வளர்ப்பதோடு, இயற்கையையும் பல வழிகளில் காக்கமுடியும்.

46. இந்த உரைப்பகுதி எதனைப்பற்றிப் பேசுகின்றது? (2 Marks)

47. வீட்டுத் தோட்டம் செய்வதனால் என்ன திறன்களை வளர்த்துக்கொள்ளலாம்? (3 Marks)

48. தோட்டத்தில் பூச்சிக்கொல்லிகளாக எவற்றைப் பாவிக்கலாம்? (2 Marks)

49. சுற்றுபுறச்சூழலைப் பாதுகாக்க உரைப்பகுதியில் எவ்வாறான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன? (4 Marks)

50. சுற்றுபுறச்சூழலைப் பாதுகாக்க இவ்வுரைப்பகுதியில் சொன்ன விடயங்களுக்கு அப்பால் நீங்கள் என்ன விடயங்களை முன்வைப்பீர்கள்? (4 Marks)

**பின்வரும் சொற்றொடர்களில் எழுத்துப் பிழைகளற்ற சொற்றொடர்களை தெரிவு செய்து எழுதுக.**

**(1 x 5 = 5 Marks)**

51. கானல்நீர் / அரண்மனை / விழி
காணல்நீர் / அரன்மனை / விழி
கானள்நீர் / அரண்மணை / விலி

52. வர்னணை / வல்லமை / வயள்
வர்ணனை/ வல்லமை / வயல்
வரனனை/ வள்ளமை / வயழ்

53. பனிவு / பல்ளாக்கு / பலசரக்கு
பணிவு / பள்ளக்கு / பளசரக்கு
பணிவு / பல்லக்கு / பலசரக்கு

54. துனிவு / துண்பம் / துல்லியம்
துணிவு / துன்பம் / துல்லியம்
துணிவு / துண்பம் / துள்ளியம்

55. தென்றல் / தெளிவு / தெற்கு
தென்றல் / தெழிவு / தெற்கு
தென்ரல் / தெளிவு / தெர்கு

**கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.** (2 x 5 = 10 Marks)

## வீட்டுக்கு ஒரு முருங்கை மரம்

அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான வீடுகளில் வீட்டுக்கு ஒரு முருங்கை மரம் கட்டாயம் வைத்திருப்பதைப் பார்க்க முடியும். இன்றைய நவீன காலத்தில் மரம் வளர்ப்பது குறைந்து, கடைகளில் முருங்கைக்கீரை வாங்கும் நிலைக்கு வந்து விட்டோம். இந்த முருங்கை மரத்தின் இலை, பூ, காய், விதை, வேர், பட்டை போன்ற அனைத்துப் பகுதிகளும் பல மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளன.

கீரையின் அரசன் என்று கூறப்படும் இந்த முருங்கைக் கீரையை, வாரத்தில் மூன்று முறையாவது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். காரணம் இந்தக் கீரையில் இரும்புச் சத்து, பொட்டாசியம், கல்சியம், செப்பு, சோடியம், நாகம், மெக்னீசியம், வைட்டமின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் பி, நார்ச்சத்து, புரதம் போன்ற பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

முருங்கைக்கீரையின் மகிமையை உணர்ந்துதான் 'ஒரு எருதும் ஒரு முருங்கை மரமும் இருந்து விட்டால் போதும், எந்த வித வறட்சியையும் சமாளித்துவிடலாம்' என்று கிராமங்களில் கூறியிருக்கிறார்கள். இது போன்ற கீரைகளை வாரத்திற்கு மூன்று நாட்களாவது சமைத்துச் சாப்பிட்டு வந்தால் புரதக் குறைபாடு, ஊட்டச்சத்துச் குறைபாடு, வளர்ச்சிப் பாதிப்பு போன்ற பிரச்சனைகளை இல்லாமல் செய்துவிடும்.

உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைத் தருவதோடு, உடல் பிரச்னைகளை நீக்கும் பணிகளையும் முருங்கை எனும் அற்புதக் கீரை செய்கிறது. இதில் இரும்புச் சத்து அதிகம் உள்ளதால் இரத்தச்சோகை உள்ளவர்கள் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இரும்புச் சத்து அதிகரிக்கும். முருங்கையைப் பொறுத்தவரை விதம்விதமாகச் சமைக்கலாம். சில கீரைகளில் கடையல், பொரியல் மட்டும் தான் சமைக்கலாம். ஆனால் முருங்கைக் கீரையில் மசியல், பிரட்டல், குழம்பு, இரசம் என்று பல விதமாகவும் சமையல் செய்யலாம். இதனுடைய சுவையும் புதிதாக இருக்கும் என்பதால் 'அய்யோ கீரையா' என்று குழந்தைகளும் ஓரங்கட்ட மாட்டார்கள்.

56. முருங்கை மரத்தின் மருத்துவக் குணங்களைக் கொண்ட நான்கு பகுதிகளை எழுதுக.

57. முருங்கைக் கீரை என்ன பெயரினால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

58. முருங்கைக் கீரையில் உள்ள ஊட்டச்சத்துக்கள் நான்கு எழுதுக.

59. முருங்கை கீரையின் மகிமை பற்றி கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் கூறுகின்ற கூற்று எது?

60. முருங்கைக் கீரையைப் பயன்படுத்தி சமைக்க கூடிய உணவு வகைகள் எவை?

**61. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.** (20 Marks)

- உங்கள் நண்பர் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு வரவுள்ளதாக அறியத்தந்துள்ளார். இங்கு தமிழர்கள் எவ்வாறு தமது பொழுதை மகிழ்ச்சியாகப் போக்குகின்றார்கள் என்று அவர் வினவியுள்ளார். இங்கு தமிழர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு என்ன வழிகள் இருக்கின்றன என்பதுபற்றிய கடிதம் ஒன்றை எழுதுக.

- இருபத்தோராம் நூற்றாண்டில் வேகமாக வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவு முன்னிற்கின்றது. நாம் வாழும், கற்கும் முறைகளில், இந்தச் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதுபற்றிய கட்டுரையை எழுதுக.